* **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் ஜாதிக் கலவரம் என்ற ஒன்று ஏற்பட்டாலும் யாருடைய அறிவுறுத்தலுக்கும் ஆணைகளுக்கும் காத்திருக்காமல், காவல்துறையினர் தாமாகவே அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று அமைதியை மீண்டும் அங்கே நிலை நாட்டுகிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினால், அதைக் கடிதமாக என்னிடத்தில் கொடுத்தால் காவல் துறையைத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆணையிட ஏதுவாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) தவறான மதிப்பெண் பட்டியல் கொடுத்து மருத்துவக் கல்லூரிகளில் சில மாணவர்கள் சேர்ந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. க. அர்ச்சுனன்.

முற்பகல் 11.20

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, "1993-ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு விண்ணப்பித்த சில மாணவர்கள் தங்கள் விண்ணப்பத்தில் தாங்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு பதிலாக கூடுதலாக மதிப்பெண்கள் பெற்றதாக காண்பித்து சேர்க்கை அனுமதி பெற்றதன் அடிப்படையில் மேற்படி கல்லூரிகளில் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

1993-94-ம் ஆண்டுக்கான மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பித்தவர்களில் 119 மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்கள் சந்தேகத்தின் பேரில் அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு சரி பார்ப்பதற்காக அனுப்பப்பட்டன. அவைகளில் 23 மதிப்பெண் சான்றிதழ்கள் சரியானதாகவும், ஏனைய 96 மதிப்பெண் சான்றிதழ்கள் போலியானது என்றும் கண்டறியப்பட்டது. இந்த 96 போலி மதிப்பெண் சான்றிதழ் சமர்ப்பித்த மாணவர்களில் கீழ்க்காணும் 6 மாணவர்கள் முதலாண்டு மருத்துவ/பல்மருத்துவ படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

வரிசை எண்.	பெயர்.
1.	செல்வி ஜெ. ஆர். நிராஜா
2.	திரு. ஆர். கே. பாஸ்கர்
3.	திரு. ஆர். சுரேஷ்குமார்
4.	திரு. ஏ. ராஜராஜசோழன்
5.	திரு. சி. பால்ராஜ்
6.	திரு. என். டி. தேவராஜ்.

மேற்கண்ட 6 பேரில், அரசு தேர்வுகள் இயக்ககத்திலிருந்து மதிப்பெண் சான்றிதழ் சரிபார்த்த அறிக்கை பெறுமுன் செல்வி ஜெ. ஆர். நிராஜா என்ற மாணவி மட்டும் முதலாண்டு எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பில் சேர அனுமதி அட்டை அளிக்கப்பட்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் சமர்ப்பித்தது போலி மதிப்பெண் சான்றிதழ் என்று அரசு தேர்வுகள் இயக்குநரிடமிருந்து அறிக்கை வரப்பெற்ற உடனேயே, இவரை சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து உடனடியாக வெளியேற்றும்படியும், போலி மதிப்பெண் சான்றிதழ் சமர்ப்பித்ததற்காக காவல்துறை நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறும் மருத்துவக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவ்வாறே, அந்த மாணவி மருத்துவக் கல்லூரியிலிருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டார். அவர்மீது காவல்துறையிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. மேலும், போலி மதிப்பெண் சான்றிதழ் சமர்ப்பித்த அனைத்து மாணவர்கள் மீதும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, போலி மதிப்பெண் சான்றிதழ் அடிப்படையில் கூடுதலாக மாணவர் எவரும் மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் இந்த ஊழலைக் கண்டு பிடித்தமைக்கு புரட்சித் தலைவியினுடைய

நிர்வாகத்தையும், ஆட்சியையும் மனதாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே, எதிர்காலத்திலே ஒவ்வொரு ஆண்டும் இப்படிப்பட்ட இந்த மதிப்பெண்கள் பட்டியல்கள் சரிபார்க்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறது என்ற காரணத்தால் சரிபார்க்கப்பட்டு அதிலே தவறாக மதிப்பெண் பட்டியலைக் கொடுத்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தவறான மதிப்பெண் பட்டியலைக் கொடுத்தவர்கள் யாரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஒரேயொருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அவரும் கல்லூரியை விட்டு வெளியிலே அனுப்பப்பட்டிருக்கிறார். வருகிற ஆண்டிலே அனைத்து விண்ணப்பங்களையும் அது சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்ற மாணவருடைய விண்ணப்பங்களை முன்கூட்டியே தேர்வாணையத்தோடு கலந்தாலோசித்து அதை ஒப்பிட்டுப் பார்த்து சரியான விண்ணப்பம்தானா, சரியான மதிப்பெண் பட்டியலா என்பதைப் பார்த்த பின்னாலேதான் சேர்க்கப்படவேண்டும் என்ற உத்தரவு இப்பொழுது இந்தத் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றம் சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களெல்லாம் கைது செய்யப் பட்டிருக்கிறார்களா? தற்போது இந்த இன்வெஸ்டிகேஷன் விசாரணை எந்த நிலையிலுள்ளது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தவறான மதிப்பெண்ணைக் கொடுத்தவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்காகக் காவல்துறைக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், கல்வித் துறையின் மூலமாக என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ சட்டத்திற்குட்பட்டு அந்த நடவடிக்கையும் எடுப்பதற்காக அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக, இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமாக வைத்து அதைச் செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே இந்தத் தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காகவே, இப்பொழுது தவறு செய்தவர்களின் மீது மிகக் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு தொடங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை.